## கோயம்புத்தூர் மாநகராட்சி

**அனுப்புநர்**

**திருமதி. ஆ. கல்பனா,**
**மேயர்,**
கோயம்புத்தூர் மாநகராட்சி,
கோயம்புத்தூர் -641 001

**பெறுநர்**

மதிப்பிற்குரிய துணை மேயர்,
அனைத்து மாமன்ற உறுப்பினர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

அனைத்துப் பிரிவுத் தலைமைகள்,
மண்டல உதவி ஆணையாளர்கள்,
கோயம்புத்தூர் மாநகராட்சி.

மாண்புமிகு பாராளுமன்ற
உறுப்பினர்கள்,
(கோயம்புத்தூர் மற்றும்
பொள்ளாச்சி
பாராளுமன்றத் தொகுதிகள்)

மாண்புமிகு சட்டமன்ற
உறுப்பினர்கள்,
(கவுண்டம்பாளையம்,
கோயம்புத்தூர் வடக்கு,
தொண்டாமுத்தூர்,
கோயம்புத்தூர் தெற்கு,
சிங்காநல்லூர் மற்றும்
கிணத்துக்கடவு
சட்டமன்ற தொகுதிகள்).

**ந.க.எண் : 5637/2022 / எம்சி. 8 நாள் 23.11.2022**

**அய்யா /அம்மா,**

**பொருள் :** கோயம்புத்தூர் மாநகராட்சி – மாமன்ற சாதாரணக் கூட்டம் - **30.11.2022 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு** நடைபெறுதல் -தகவல் தெரிவித்தல் - தொடர்பாக.

-----------

கோயம்புத்தூர் மாநகராட்சியில் மாமன்ற சாதாரணக் கூட்டம் **30.11.2022 ஆம் தேதி காலை 10.30 மணிக்கு** மாண்புமிகு மேயர் அவர்கள் தலைமையில் மாநகராட்சி பிரதான அலுவலக வளாகத்தில் உள்ள விக்டோரியா ஹால் கூட்ட அரங்கத்தில் நடைபெற உள்ளது.

மேற்படி கூட்டத்தில் அனைவரும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது.

**(ஒப்பம்) மேயர்**
**கோயம்புத்தூர் மாநகராட்சி**

**/உத்திரவின்படி அனுப்பப்படுகிறது /**

23/11/22
மாமன்றச் செயலாளர்

**நகல் :**

துணை ஆணையாளர், கோயம்புத்தூர் மாநகராட்சி
ஆணையாளர் , கோயம்புத்தூர் மாநகராட்சி

## திருக்குறள்

வீறெய்தி மாண்டார் வினைத்திட்டம் வேந்தன்கண்
ஊறெய்தி உள்ளப் படும்.

**குறள் - 665**

## விளக்கம்

துணிவாகச் செயலாற்றி மாண்புடைய புகழ் பெற்றவர்களின் திறமை ஆட்சியாளர்களால் இனம்கண்டு போற்றப்படும்.

**திருவள்ளுவர்.**

---------------------------------------------------------------------------------------

## தீண்டாமையை ஒழிக்க மேற்கொள்ளும் உறுதிமொழி

இந்திய அரசியலமைப்பின்பால், இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன்/குடிமகள் ஆகிய நான், நமது அரசியல் அமைப்பின்படி, தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர்மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்க மாட்டேன் என்று இதனால் உளமார உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க, சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய அரசியல் அமைப்பின்பால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்கும் என்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## பொருள் எண் 1

| | |
|---|---|
| பொருள்- | கோயம்புத்துார் மாநகராட்சி – வார்டுகள், மற்றும் நிலைக்குழுக்கள், ஆணையர், மேயர் மற்றும் மன்றத்திற்கான நிதி அதிகார வரம்பு மாற்றியமைக்கப்பட்டது – அரசாணை வெளியிடப்பட்டது – மாமன்றத்தில் பதிவு செய்தல் - தொடர்பாக |
| பார்வை - | அரசாணை (Ms) எண் 158 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (எம்.சி. 4) துறை நாள் 02.11.2022 |

-------------

பார்வையில் காணும் அரசாணை (Ms) எண் 158 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கு (எம்.சி. 4) துறை நாள் 02.11.2022-இல் பிறவற்றினுள், கீழ்காணும் அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு வார்டுகள், மற்றும் நிலைக்குழுக்கள், ஆணையர், மேயர், மற்றும் மன்றத்திற்கான நிதி அதிகார வரம்பு மாற்றியமைக்கப்பட்டு உத்திரவிடப்பட்டுள்ளது.

Table 1 (B) (Capital works for Corporation)

| **The Competent Authority to accord Administrative Sanction for the Infrastructural development works** | | |
|---|---|---|
| **Source of Fund** | **Estimate Value for infrastructure development works Costing** | **Competent Authority to accord Adminitrative Sanction** |
| Central Government/ State Government funds/ External Aided funds | Upto Rs. 100 lakh | Commissioner of Corporation |
| | More than Rs. 100 lakh upto Rs.1000 lakh | Director of Municipal Administration |
| | More than Rs. 1000 lakh | Government |
| Corporation General Funds | Upto Rs. 10 lakh | With the Concurrence of Commissioner of Corporation, the Ward Committee shall sanction and subsequently to be placed in the Council for Record. |
| | More than Rs. 10 lakh upto Rs. 20 lakh | With the Concurrence of Commissioner of Corporation, the Standing Committee for Health, Education and Works shall sanction and subsequently to be placed in the Council for Record. |
| | More than Rs. 20 lakh upto Rs. 30 lakh | Corporation Commissioner shall sanction and subsequently to be placed in the Council for Record. |
| | More than Rs. 30 lakh upto Rs. 50 lakh | Mayor of the Corporation shall sanction in consultation with Corporation Commissioner, subsequently to be placed in the Council |
| | More than Rs. 50 lakh upto Rs. 100 lakh | Council of Corporation |
| | More than Rs. 100 lakh upto Rs. 1000 lakh | Considering the Council Resolution the Director of Municipal Administration shall sanction |
| | More than Rs. 1000 lakh | Considering the Council Resolution the Governrment shall sanction |

Table 2 (B) (Maintenance works for Corporation)

| The Competent Authority to accord Administrative Sanction for the Maintenance/Repair works | | |
|---|---|---|
| **Source of Fund** | **Estimate Value for Maintenance and Repair works costing** | **Competent Authority to accord Administrative Sanction** |
| Corporation General Funds | Upto Rs. 5 lakh | With the Concurrence of Commissioner of Corporation, the Ward Committee shall sanction and subsequently to be placed in the Council for Record. |
| | More than Rs. 5 lakh upto Rs. 10 lakh | With the Concurrence of Commissioner of Corporation, the Standing Committee for Health, Education and Works shall sanction and subsequently to be placed in the Council for Record. |
| | More than Rs. 10 lakh upto Rs. 15 lakh | Commissioner of Corporation shall sanction and subsequently to be placed in the Council for Record. |
| | More than Rs. 15 lakh upto Rs. 25 lakh | With the concurrence of Commissioner of Corporation, the Mayor of the Corporation shall sanction and subsequently to be placed in the Council for Record. |
| | More than Rs. 25 lakh upto Rs. 50 lakh | Council of Corporation |
| | More than Rs. 50 lakh | Considering the Council Resolution the Director of Municipal Administration shall sanction |

மேற்காணும் அரசாணை மாமன்றத்தின் பார்வைக்கும் பதிவிற்கும் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு - பதிவு செய்யலாம் ந.க.எண் 831/ 2022/ எம்.சி. 8

**<u>மாநகர மன்றத் தீர்மானம் எண் 285 நாள் 30.11.2022</u>**

பதிவு செய்யப்பட்டது.

---

## பொருள் எண் 2

பொருள் : கோயம்புத்தூர் மாநகராட்சி - மேற்கு மண்டலம் - வார்டு எண். 71 - மாநகராட்சி ஆண்கள் மேல் நிலைப் பள்ளி வளாகத்தில் செயல்பட்டு வந்த தமிழ்நாடு இசை கல்லூரி கட்டிடத்தை அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் - மாதாந்திர உரிமக்கட்டணம் நிர்ணயம் செய்வது - தொடர்பாக.

பார்வை :

1. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், முனைவர் அவர்களின் கடித நாள். 27.05.2016.
2. கோயம்புத்தூர் மாநகராட்சி ஆணையாளர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண். 9286/2016/அ1(மே) நாள்.11.07.2016.
3. இவ்வலுவலக கடித ந.க.எண். 1938/2019/அ1(மே) நாள்.30.09.2021.
4. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், முனைவர் அவர்களின் கடித நாள். 18.10.2021, 06.12.2021.
5. அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம், முனைவர் அவர்களின் கடித நாள். 25.01.2022, 08.02.2022, 14.02.2022, 10.03.2022, 22.03.2022, 25.03.2022, 29.03.2022, 23.08.2022 மற்றும் 26.09.2022.
6. ஆணையாளர் அவர்களின் உத்திரவு நாள். 02.10.2022.
7. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட தீர்மான எண். 60 நாள் 10.10.2022.

******

கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலத்திற்குட்பட்ட வார்டு எண். 71, ஆரோக்கியசாமி ரோடு (மேற்கு) -ல் உள்ள மாநகராட்சி ஆண்கள் மேல் நிலைப் பள்ளி வளாகத்தில் மாநகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தை அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக ஆராய்ச்சி மையம் துவங்குவதற்கு இடம் வழங்குமாறு பார்வை 1ல் காணும் கடிதத்தின் வாயிலாக கோரப்பட்டது.

பார்வை 2ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்திரவின்படி, மாநகராட்சி ஆண்கள் மேல் நிலைப் பள்ளி வளாகத்தில், கொடைகானல் அன்னை தெரசா மகளிர் பல்கலை கழகம் ஆராய்ச்சி (மற்றும்) விரிவாக்க மையம் செயல்பட கட்டிட வளாகத்தை ஒதுக்கீடு செய்து 11.07.2016 அன்று செயல்முறை ஆணை வழங்கப்பட்டது. மேற்படி, பல்கலை கழகம் ஆராய்ச்சி (மற்றும்) விரிவாக்க மையத்திற்கு பொதுபணித்துறை வாடகை மதிப்பு வழிகாட்டலின்படி மாத வாடகை ரூ.2,42,628/- என கணக்கீடு செய்யப்பட்டது.

பார்வை 3ல் காணும் இவ்வலுவலக கடிதத்தின்படி, மேற்படி கட்டிடத்திற்கு பொதுப்பணித்துறை மதிப்பீட்டின்படி, மாத வாடகை ரூ.2,42,628/- என நிர்ணயம் செய்யப்பட்டு, சம்மத கடிதத்தினை மாநகராட்சிக்கு வழங்குமாறு அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகத்திற்கு தெரிவிக்கப்பட்டது.

பார்வை 4ல் காணும் கடிதங்களின்படி, மேற்படி பல்கலைக்கழகம் பெண்களுக்காக, பெண்களின் கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் மேம்பாட்டிற்காக தாழ்த்தப்பட்ட சமூகத்தினர் மற்றும் பின்தங்கிய மக்கள் முன்னேற்றத்திற்காகவும் குறைந்த கட்டணத்தில் உயர்கல்வி வழங்குவதற்காக ஆரம்பிக்கப்பட்ட பல்கலைக்கழகம் எனவும், மிகக்குறைந்த கல்வி கட்டணமே மாணவியர்களிடமிருந்து வசூலிக்கப்பட்டு வருவதாகவும், இரண்டு லட்சத்திற்கு மேலான தொகையை பல்கலைக்கழகத்தால் செலுத்த இயலாது எனவும் தெரிவிக்கப்பட்டது.

பார்வை 5ல் காணும் கடிதங்களின் வாயிலாக அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக துணைவேந்தர் அவர்கள் பல்கலைக்கழகம் தற்போது செயல்பட்டு வரும் கட்டிடத்திலேயே செயல்படுவதற்கும் அதுவரையிலும் வாடகை செலுத்துவதிலிருந்து விலக்களிப்பதற்கு ஆவன செய்யுமாறும் அரசால் வேறு புதிய கட்டிடங்களுடன் கூடிய இடத்தினை பல்கலைக்கழகத்திற்கு வழங்கும் வரை ஆர். எஸ் புரம் ஆரோக்கியசாமி சாலையில் அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழக ஆராய்ச்சி மற்றும் விரிவாக்க மையம் செயல்படும் கட்டிடத்திலேயே செயல்படவும் அதுவரையிலும் வாடகை செலுத்துவதிலிருந்து விலக்களிப்பதற்கு ஆவன செய்யுமாறு தெரிவிக்கப்பட்டது.

பார்வை 6ல் காணும் ஆணையாளர் அவர்களின் உத்திரவின்படி, அன்னை தெரசா மகளிர் பல்கலைக்கழகம் பெண்களுக்கான கல்வி நிறுவனம் என்பதாலும், பெண் கல்வியை நமது அரசு தொடர்ந்து முன்னுரிமை கொடுத்து ஊக்குவிக்கிறது. கல்வி என்பது சமூகத்திற்கும், வீட்டிற்கும் சமத்துவத்தை உறுதி செய்வதற்கு முக்கியமான கருவியாக இருக்கும். எனவே, இதனை சிறப்பினமாக கருதி மாதாந்திர வாடகை தொகையாக ரூ. 25,000/- ஐ நிர்ணயம் செய்யலாம் என வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவிற்கு பொருள் சமர்ப்பிக்கப்பட்டதில், வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழு கூட்ட தீர்மான எண். 60 நாள். 10.10.2022 ல் ‘‘அலுவலக குறிப்பினை ஏற்று மாமன்றத்திகு பரிந்துரை செய்து தீர்மானிக்கப்பட்டதை மாநகர மன்றத்தின் ஒப்புதலுக்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு - அனுமதிக்கலாம் ந.க.எண். 6887 /2021/அ1( மே)

**<u>மாநகர மன்றத் தீர்மானம் எண் 286 நாள் 30.11.2022</u>**

பொருளில் குறிப்பிட்டுள்ள வார்டு எண் 71-க்குப் பதிலாக வார்டு எண் 72 என திருத்தம் செய்து அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 3

பொருள் : சமுதாய நலக்கூடம் வாடகை நிர்ணயம் செய்வது - கோயம்புத்தூர் மாநகராட்சி - கிழக்கு மண்டலம் - வார்டு எண் 7 (பழையது 35) - ஆர்.ஜி.புதூர் பகுதியில் சமுதாயக்கூடம் புதுப்பிக்கப்பட்டுள்ளது - வாடகை அடிப்படையில் பயன்படுத்துவதற்கு வாடகை நிர்ணயம் செய்தது- வரிவதிப்பு மற்றும் நிதிக்குழுவின் ஒப்புதல் பெற்றது - மாமன்றத்தின் அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

பார்வை :

1. உதவி நிர்வாகப்பொறியாளர் , கிழக்கு மண்டலம் அவர்களின் குறிப்பு நாள். 21.12.2021.
2. உதவிஆணையாளர் (கிழக்கு) அவர்களின் குறிப்பு நாள் 11.01.2022.
3. வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவின் தீர்மானம் எண். 58, நாள். 10.10.2022.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலத்திற்குட்பட்ட பகுதியில வார்டு எண் 7 (பழையது 35), ஆர்.ஜி.புதூர் பகுதியில் சமுதாயக் கூடக் கட்டிடம் புதுப்பிக்கப்பட்டு பொதுமக்கள் பயன்படுத்தி வருகின்றனர்.

தற்போது, மேற்குறிப்பிட்ட சமுதாயக்கூட கட்டிடத்திற்கு பார்வை (1)-ல் காணும் உதவி நிர்வாகப் பொறியாளர் அவர்களின் அறிக்கையின்படியும், பார்வை (2)-ல் காணும் உதவிஆணையாளர் (கிழக்கு) அவர்களின் குறிப்பின்படியும் பொதுப்பணித்துறை வழிகாட்டுதல்படி நாள் ஒன்றிற்கு வாடகை ரூ.1500/-, பராமரிப்புத் தொகை ரூ.500/- ஆக கணக்கீடு செய்யப்பட்டு, கணக்கீடு செய்யப்பட்ட வாடகைத் தொகைக்கு ஒப்படைப்பு செய்யவும், வைப்புத் தொகையாக ரூ.10,000/-நிர்ணயம் செய்யவும், பார்வை (3)-ல் காணும் வரிவிதிப்பு மற்றும் நிதிக்குழுவில் பரிந்துரைக்கப்பட்டுள்ளது.

மாமன்றத்தின் அனுமதி வேண்டி பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண். 11743/2021/அ1(கி)

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 287 நாள் 30.11.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 4

பொருள்:- பொது சுகாதாரம் - கோயம்புத்தூர் மாநகராட்சி– தூய்மைப் பணியாளர்களுக்கு 2022-23-ம் ஆண்டிற்கான சீருடைகள் வாங்கி வழங்கியது மன்றத்தின் பின்னேற்பு – தொடர்பாக.

----------------

அரசாணை எண் (2டி) எண் 37 நாள் 14.05.1999 நாராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை உத்தரவுப்படி கோயம்புத்தூர் மாநகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிபுரியும் தூய்மைப்பணியாளர்களுக்கு ஒவ்வொரு ஆண்டும், ஆண் தூய்மைப் பணியாளர்களுக்கு இரண்டு ஜோடி சீருடைகளுக்கும், பெண் தூய்மைப்பணியாளர்களுக்கு இரண்டு பாலிஸ்டர் புடவையும், இரண்டு ஜாக்கெட்டுகளும் , 1 ஜோடி காலணியும் மற்றும் ஒரு தலைப்பாகை துணியும் மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வருகிறது. ஒரு ஜோடி சீருடை தீபாவளிப்பண்டிகைக்கும் மற்றொரு ஜோடி சீருடை பொங்கல் பண்டிகையின் போதும் வழங்கப்பட்டு வருகிறது.

அரசாணை (வாலாயம்) எண் 393 நாள் 16.09.1997 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குதுறை (மா.ந.2) உத்தரவுப்படி, மலேரியா ஒழிப்புத்திட்ட பணியாளர்களுக்கு 2 ஜோடி முழுக்கால் சட்டை, 2 ஜோடி அரைக்கை சட்டை, காலணி ஆகியன வழங்கப்பட்டு வருகிறது. மாமன்ற தீர்மான எண் 87, நாள் 30.09.2009-ன் படி அனைத்து தூய்மைப் பணியாளர்களுக்கும் முழுக்கால் சட்டை வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

அரசாணை எண் 50 கைத்தறி, காதி (டி4) டிபார்ட்மெண்ட் நாள் 10.03.1995 ன்படி அரசுதுறை நிறுவனங்களான கோ-ஆப்டெக்ஸ், தமிழ்நாடு டெக்ஸ்டைல்ஸ், தேசிய பஞ்சாலைக்கழகம் ஆகிய நிறுவனங்களிடமிருந்து இவ்வகை சீருடைகள் நேரிடையாக கொள்முதல் செய்யப்பட்டு வருகிறது.

அரசாணையின்படி ஆண் தூய்மைப்பணியாளர்களுக்கு 1 செட் சீருடைக்கு தையற் கூலி ரூ.100/-, பெண் தூய்மைப்பணியாளர்களுக்கு 1 ஜாக்கெட் தையற்கூலி ரூ.20-ம் மாநகராட்சி நிதியிலிருந்து வழங்கப்பட்டு வந்தது. மாமன்ற தீர்மான எண் 87, நாள் 30.09.2009-ன்படி ஆண் தூய்மைப்பணியாளர்களுக்கு 1 செட் சீருடைக்கு தையற்கூலி ரூ.200-ம் மற்றும் பெண் தூய்மைப் பணியாளர்களுக்கு 1 ஜாக்கெட் தையற்கூலி ரூ.40-ம் வழங்க தீர்மானிக்கப்பட்டு வழங்கப்பட்டுள்ளது. சுகாதாரநிலைக்குழு திர்மான எண் 33 நாள் 10.10.2013-ன் படி ஆண் தூய்மைப்பணியாளர்களுக்கு தையற்கூலி ரூ.450/- மற்றும் பெண் தூய்மைப்பணியாளர்களுக்கு ரூ.100/- ம் வழங்கப்பட்டது.

மாமன்ற தீர்மானம் எண்.553 நாள். 29.09.2020-ன் படி கடந்த 2020-ம் ஆண்டு முதல் பெண் தூய்மைப்பணியாளர்களுக்கு தையற்கூலி ரூ.100/- லிருந்து ரூ.150/- ஆக உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது.

சென்ற 2021 - 22 –ம் ஆண்டு சீருடைகள் வாங்கி வழங்க ரூ.20,68,672/-ம், தையற்கூலி செலவினம் ரூ. 17,32,500/- மற்றும் காலணிகளுக்கு ரூ.6,37,437/-ம் ஆக மொத்தம் ரூ.44,38,609/- செலவாகியுள்ளது.

இவ்வாண்டு சீருடைகள் வாங்கி வழங்குவதற்கு ரூ.75.00 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. பொது சுகாதார பண்டகக்காப்பாளர் அவர்களின் அறிக்கையின் வாயிலாக அனைத்து மண்டல சுகாதார அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட பட்டியலின்படி மாநகராட்சியில் தற்போது பணிபுரியும் நிரந்தர தூய்மைபணியாளர்கள் மொத்தம் 2409 நபர்களுக்கு (ஆண் தூய்மைப்பணியாளர்கள் 1553 மற்றும் பெண் தூய்மைப்பணியாளர்கள் 856) 2022 - 23-ம் ஆண்டிற்கு 2 ஜோடி சீருடைகள், தையற்கூலி, தலைப்பாகை மற்றும் காலணிகளை அரசுத்துறை நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் பெற்று ரூ.52.00 இலட்சத்திற்குட்பட்ட செலவினத்தில் வாங்கி வழங்கிட மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டது. எனவே, இச்செலவினத்திற்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :பின்னேற்பு வழங்கலாம். ந.க.எண். 4703/2022/எம்.இ.4

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 288 நாள் 30.11.2022**

பின்னேற்பு வழங்கப்பட்டது

---

## பொருள் எண் 5

பொருள்: பொது சுகாதாரம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – தூய்மை பணியாளர்களுக்கு 2023-ம் ஆண்டிற்கு கார்பாலிக் சோப்புகள் வாங்கி வழங்கியது மாமன்றத்தின் பின்னேற்பு – தொடர்பாக.

-----------------

மாநகராட்சி பொது சுகாதார பண்டகக்காப்பாளர் அவர்களின் அறிக்கையின் படி கோயம்புத்தூர் மாநகராட்சி 5 மண்டலங்கள், நகர் நல மையங்கள் மற்றும் மருந்தகங்களில் பணியாற்றும் நிரந்திர தூய்மை பணியாளர்களாக உள்ள 2409 பணியாளர்களுக்கு 2023-ம் ஆண்டிற்கு சோப்புகள் வாங்கி வழங்க கேட்டுக்கொண்டுள்ளார்.

மேலும் மாநகராட்சி பொது சுகாதார பண்டகக்காப்பாளர் அறிக்கையின் படி ஒரு பணியாளருக்கு மாதம் ஒரு சோப்பு வீதம் ஒரு வருடத்திற்கு 12 சோப்புகள் என மொத்தம் 2409 தூய்மை பணியாளர்களுக்கு ஒரு வருடத்திற்கு 28,908 சோப்புகள் என ஒரு வருடத்திற்கு வாங்கி வழங்கக் கேட்டுக் கொண்டுள்ளார். அதன்படி கதர்கிராமத் தொழில்கள் நிறுவனத்தாரிடம் வாங்கப்பட்ட விலைப்புள்ளி அடிப்படையில் ஒரு குமரி இயற்கை மூலிகை சோப்பு (கார்பாலிக் சோப்பு) வரிகள் உட்பட ரூ. 27.73 – வீதம் 28,908 சோப்புகளுக்கு மொத்த செலவினம் ரூ. 8,01,619/- ஆகும்.

எனவே, மாநகராட்சியில் பணிபுரியும் 2409 தூய்மை பணியாளர்களுக்கு ஒரு வருட காலத்திற்கு 28,908 எண்ணிகையில் கார்பாலிக் சோப்புகளை (குமரி இயற்கை மூலிகை சோப்பு) தி/ள். கதர் கிராமத் தொழில்கள் நிறுவனத்திடம் மொத்தம் ரூ.8,01,619/- செலவினத்தில் வாங்கி வழங்கிட மாண்புமிகு மேயர் அவர்களின் முன் அனுமதி பெறப்பட்டது. எனவே, இச்செலவினத்திற்கு மாமன்றத்தின் பின்னேற்பு வேண்டி பொருள் சமர்பிக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு :பின்னேற்பு வழங்கலாம். ந.க.எண். 4703/2022/எம்.இ.4

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 289 நாள் 30.11.2022**

பின்னேற்பு வழங்கப்பட்டது

---

## பொருள் எண் 6

பொருள்:- பொது சுகாதாரம் – கோயம்புத்தூர் மாநகராட்சி – மண்டல வார்டு பகுதிகளில் கொரோனா பாதுகாப்பு நடவடிக்கைகள், பன்றி காய்சல் (H1 N1), டெங்கு காய்சல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை தொடர்பான பணிகள் – மண்டல நல அலுவலர்கள் மற்றும் மண்டல சுகாதார அலுவலர்களுக்கு வாகனங்கள் மாதாந்திர வாடகை அடிப்படையில் நியமனம் செய்தல் – தொடர்பு.

கோயம்புத்தூர் மாநகராட்சியின் ஐந்து மண்டலங்களில் கோவிட் 19 தொடர்பான பணிகளை மேற்கொள்வதற்கு ஐந்து மண்டல நல அலுவலர்கள், மண்டல சுகாதார அலுவலர்கள் மற்றும் உதவி மாநகர நல அலுவலர்களுக்கும் ஐந்து இருக்கைகள் கொண்ட 11 வாகனங்கள் மாதாந்திர வாடகை தலா ரூ.56,000/- (ரூ.6000/- ஜி.எஸ்,டி சேர்த்து) அடிப்படையில் 25.04.2022 முதல் 24.09.2022 வரை ஐந்து மாதங்களுக்கு (புதிய ஒப்பந்ததாரர் நியமனம் செய்யப்படும் வரை) R.V.R Tours and Travels நிறுவனம் மூலம் இயக்கப்பட்டு வருகிறது.

மேற்படி, வாகனங்களை தற்பொழுது வழங்கி வரும் ஒப்பந்ததாரருக்கு வழங்கப்பட்டு வரும் மாதவாடகைத் தொகை மிககுறைவாக இருப்பதாக தொரிவித்து தொடர்ந்து வழங்க இயலாது என தெரிவித்துள்ளார். தற்பொழுது இரண்டு மண்டல நல அலுவலர்கள் மற்றும் ஐந்து மண்டல சுகாதார அலுவலர்கள் மண்டல வார்டு பகுதிகளில் கொரோனா பாதுகாப்பு நடவடிக்கைகள், பன்றி காய்சல் (H1 N1), டெங்கு காய்சல் மற்றும் திடக்கழிவு மேலாண்மை தொடர்பான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர். பொறியியல் பிரிவின் மூலம் மேற்படி அலுவலர்களுக்கு வாகனம் ஒதுக்கீடு செய்ய போதிய வாகனங்கள் இல்லை எனவே, இவர்களுக்கு மொத்தம் ஏழு குளிர்சாதன வசதியுடன் கூடிய ஐந்து இருக்கைகள் கொண்ட வாகனங்களை பொது சுகாதாரத்தின் அவசர அவசியம் கருதி ஏற்கனவே வழங்கப்பட்டு வரும் மாத வாடகையான ரூ.56,000/- உடன் (ரூ.6000/- ஜி.எஸ்,டி சேர்த்து) 10 விழுக்காடு உயர்வு செய்த வாடகை அடிப்படையில் கீழ்கண்டவாறு இயக்கிட விருப்பமுள்ள நிறுவனங்களிடமிருந்து விலைப்புள்ளிகள் மண்டல வாரியாக தனி தனியே கோரலாம்.

| வ. எண் | வாகனத்தின் பயன்பாடு | மண்டலம் | தேவைப்படும் வாகனம் / மாதாந்திர கி.மீ. | தேவைப்படும் காலம் | உத்தேச மாத வாடகை + ஜி.எஸ்,டி (ரூ) | உத்தேச மொத்த வாடகை செலவினம் ஜி.எஸ்,டி சேர்த்து (ரூ) |
|---|---|---|---|---|---|---|
| 1 | மண்டல நல அலுவலர் | கிழக்கு, வடக்கு, மற்றும் மத்தியம் | 1 / 1500 கி.மீ. | 16 - மாதங்கள் | 55000 + 6600 = 61,600 | 985600 |
| 2 | மண்டல நல அலுவலர் | தெற்கு, மற்றும் மேற்கு | 1 / 1500 கி.மீ. | 16 – மாதங்கள் | 55000 + 6600 = 61,600 | 985600 |
| 3 | மண்டல சுகாதார அலுவலர் | கிழக்கு, | 1 / 1500 கி.மீ. | 16 - மாதங்கள் | 55000 + 6600 = 61,600 | 985600 |
| 4 | மண்டல சுகாதார அலுவலர் | மேற்கு | 1 / 1500 கி.மீ. | 16 – மாதங்கள் | 55000 + 6600 = 61,600 | 985600 |
| 5 | மண்டல சுகாதார அலுவலர் | வடக்கு | 1 / 1500 கி.மீ. | 16 – மாதங்கள் | 55000 + 6600 = 61,600 | 985600 |
| 6 | மண்டல சுகாதார அலுவலர் | தெற்கு | 1 / 1500 கி.மீ. | 16 – மாதங்கள் | 55000 + 6600 = 61,600 | 985600 |
| 7 | மண்டல சுகாதார அலுவலர் | மத்தியம் | 1 / 1500 கி.மீ. | 16 – மாதங்கள் | 55000 + 6600 = 61,600 | 985600 |
| | | மொத்தம் | 7 | 16 - மாதங்கள் | 55000 + 6600 = 61,600 | 985600 |
| மொத்த வாடகை செலவினம் ஜி.எஸ்,டி சேர்த்து. 7 x 16 x 61,600 = 68,99,200. | | | | | | |

எனவே, மேற்படி 7 குளிர்சாதன வசதியுடன் கூடிய 5 இருக்கைகள் கொண்ட வாகனங்களை மாத வாடகை அடிப்படையில் மண்டல வாரியாக தனிதனியே நியமனம் செய்து இயக்குவதற்கும் அதற்கான உத்தேச மொத்த செலவினம் ரூ.68,99,200/- இலட்சத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மாமன்றத்தின் அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு. அனுமதிக்கலாம். ந.க.எண்.9256/2021/எம்இ3

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 290 நாள் 30.11.2022**

ஒத்திவைக்கப்பட்டது

---

## பொருள் எண் 7

பொருள் - கோயம்புத்தூர் மாநகராட்சி – தெற்கு மண்டலம் - வார்டு எண் 77 மற்றும் 78 வடக்கு குடிசை மாற்று வாரிய இடத்தில் உள்ள 119 பொதுக்குழாய்களை நிர்வாக நலன் கருதி குறைத்து இப்பகுதியில் வசித்து வரும் வறுமைக் கோட்டிற்கு கீழுள்ள குடியிருப்புத்தாரர்களுக்கு வீட்டு குடிநீர் இணைப்பு வழங்கும் பொருட்டு குடிநீர் வீட்டிணைப்பிற்கான வைப்புத் தொகை, மேற்பார்வை கட்டணம் விலக்கு அளிக்க அனுமதி வேண்டுதல் - தொடர்பாக.

----------------

கோயம்புத்தூர் மாநகராட்சியின் விரிவாக்கத்திற்கு முன்பிருந்த (2011க்கு முன்) மாநகராட்சி பகுதிகளில் ஏற்கனவே உள்ள குடிநீர் விநியோக அமைப்பினை அபிவிருத்தி மற்றும் சீரமைப்பு பணிகள் மேற்கொண்டு 24 மணி நேரமும் சீரான அழுத்தத்துடன் குடிநீர் விநியோகம் செய்யும் பணியினை, சூயஸ் பிராஜெக்ட் பிரைவேட் லிமிடெட் அவர்களுக்கு வழங்கப்பட்டு திட்ட பணிகள் தற்பொழுது நடைபெற்று வருகிறது.

ஒப்பந்தப்படி மாநகராட்சியில் உள்ள அனைத்து குடிநீர் இணைப்புகளும் புதுப்பிக்கும் பணி ஒப்பந்தத்தாரரையே சார்ந்ததாகும்.

தற்பொழுது குறிஞ்சி கார்டன் மேல்நிலை நீர்தேக்க தொட்டியில் இருந்து விநியோகிக்கத் தேவையான குழாய்கள் பதிக்கப்பட்டு வருகின்றன. இந்த பகுதிகளில் மொத்தம் 5244 வீட்டு இணைப்புகளும் 254 பொதுக்குழாய்களும் உள்ளன. அதில் வார்டு எண் 77 மற்றும் 78க்குட்பட்ட வடக்கு குடிசைமாற்று வாரிய இடத்தில் வீட்டு வசதி வாரியத்தில் குறைவான வருவாய் பிரிவினருக்காக 881 தனி வீடுகளும் 676 வீடுகள் கொண்ட அடுக்கு மாடி குடியிருப்பும் கட்டி கொடுக்கப்பட்டுள்ளது.

மேற்படி பகுதியில் மட்டும் 119 பொதுக்குழாய்கள் உள்ளன. இந்த பொது குழாய்கள் மூலம் 6095 மக்கள் பயன்பெறுகின்றனர். இந்த பொது குழாய்களுக்கு நாள் ஒன்றுக்கு 3 லட்சம் லிட்டர் குடிநீர் வழங்கப்பட்டு வருகிறது. கடந்த 30 ஆண்டுகளாக இப்பொதுக்குழாய்கள் மூலம் விநியோக்கிக்கப்பட்டு வருகிறது. இதனால் மாநகராட்சிக்கு வருடத்திற்கு ரூ.9,61,200/- வருமானம் இழப்பு ஏற்படுகிறது. ஆகையால் இந்த 119 பொதுகுழாய்களை பெருமளவு குறைத்து அப்பகுதிகளிலுள்ள பயனாளிகளுக்கு வீட்டு இணைப்புகளாக மாற்றி அமைத்தால் இதனால் பெறப்படும் குடிநீர் கட்டணத்தொகை மூலம் மாநகராட்சிக்கு வருவாய் அதிகரிக்கும்.

தற்பொழுது உள்ள நடைமுறைப்படி குடிநீர் வீட்டு இணைப்பு பெற ஒரு இணைப்பிற்கு மாநகராட்சிக்கு வைப்பு தொகையாக ரூ.5000/- மற்றும் மேற்பார்வை தொகையும் செலுத்தினால் மட்டுமே வீட்டு இணைப்பு வழங்கப்படும். மேலும் இத்தொகையை செலுத்திய பிறகு ஒவ்வொரு இணைப்புக்கான குழாய்கள் குடிநீர் மானி ஆகியவற்றிற்கான தொகை மற்றும் பொருத்துவதற்கான தொகையும் இணைப்பு பெறும் பயனாளிகளையே சேரும்.

ஆனால், இந்த மக்கள் அனைவரும் குறைந்த வருவாய் பிரிவினர் என்பதால் இவர்களால் மாநகராட்சிக்கு அத்தொகையை மொத்தமாக செலுத்த இயலாத நிலையில் உள்ளனர். எனவே, நிர்வாக நலன் கருதி தற்போது வருவாய் அல்லாத குடிநீராக (Non Revenue water) பொதுக்குழாய் மூலம் விநியோகிக்கப்பட்டு வரும் குடிநீரை வருவாய்தரத்தக்க குடிநீராக (Revenue water) மாற்றும் பொருட்டு இதனை சிறப்பினமாக கருதி வறுமைக்கோட்டிற்கு கீழுள்ள இப்பகுதி மக்களுக்கு குடிநீர் இணைப்புக்கான வைப்புத்தொகை, மேற்பார்வை கட்டணம் மற்றும் இதர கட்டணங்களிலிருந்து விலக்க அளித்தால் (Exemption) இப்பகுதியிலிருந்து பெறப்படும் குடிநீர் கட்டணம் மூலம் மாநகராட்சிக்கு கிடைக்கும் வருவாய் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

மேலும் ஏற்கெனவே மாநகராட்சி கடித ந.க.எண்.12069/2006/ப.வ.எம்/நாள் 20.09.2011ன் படி ஜவஹர்லால் நேரு தேசிய நகர்புற புரனமைப்புத் திட்டத்தின் கீழ் (BSUP) வீடுகளுக்கு குடிநீர் வீட்டு இணைப்புகளுக்கான இணைப்புத் தொகை விலக்களிக்கப்பட்டு, குறைந்த பட்ச சேவைக் கட்டணமாக ரூ.250/- மட்டும் செலுத்தினால் வீட்டு இணைப்பு வழங்கலாம் என்று உத்தரவிடப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில் தற்போது இந்த வீட்டுவசதி வாரிய குடியிருப்பில் உள்ள வறுமை கோட்டிற்கு கீழ் உள்ள அனைத்து குடியிருப்புகளுக்கும் குடிநீர் இணைப்பிற்கான வைப்புத் தொகை மற்றும் மேற்பார்வை தொகையினை விலக்கு அளித்தும் குறைந்த பட்ச சேவை கட்டணமாக ரூ.250/- மட்டும் செலுத்தினால் வீட்டு இணைப்பு வழங்கவும் அனுமதி வேண்டி மன்றத்திற்கு பொருள் வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண் :6396/ 18 /ஜே,என்,5

**<u>மாநகர மன்றத் தீர்மானம் எண் 291 நாள் 30.11.2022</u>**

அனுமதிக்கப்பட்டது.

---

## பொருள் எண் 8

கோயம்புத்தூர் மாநகராட்சி, பொறியியல் பிரிவில் – 15 வது மத்திய நிதிக்குழு திட்டத்தின் கீழ் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு மற்றும் மத்தியம் மண்டலத்திற்கு திடக்கழிவு மேலாண்மை பணிக்கு மண்டலத்திற்கு 1 எண்ணிக்கையின்படி ஐந்து மண்டலத்திற்கு 5 எண்ணிக்கையில் 14 கனமீட்டர் கொண்ட Compactor கொள்முதல் செய்தல் பணிக்கு மறுஒப்பந்தப்புள்ளி எண். e8/2022 நாள். 11/02/2022 அன்று கோரப்பட்டதில் 3 நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி உறைகள் பெறப்பட்டது. அதில் தொழில்நுட்ப தகுதி பெற்ற 2 நிறுவனங்களில் தி/ள்.காம்–அவிடா என்விரோ இன்ஜினியரிஸ் பிரைவேட் லிமிடெட், புனே என்ற இந்நிறுவனம் குறைந்த பட்ச விலைப்புள்ளி அளித்துள்ளனர்.

**அதன் விபரம் பின் வருமாறு :**

| வ. எண். | பணியின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி நாள் | மதிப்பீடு (ரூ) | ஒப்பந்ததாரரின் பெயர் கோரிய விலைப்புள்ளி |
|---|---|---|---|---|
| 1 | கோயம்புத்தூர் மாநகராட்சி, கிழக்கு மண்டலம் – 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட Compactor கொள்முதல் செய்தல் | ஒப்பந்தப்புள்ளி நாள்.11/05/2022<br><br>விலைப்புள்ளி நாள். 18/05/2022 | 41,36,000/– | தி/ள்.காம்–அவிடா என்விரோ இன்ஜினியரிஸ் பிரைவேட் லிமிடெட், புனே<br><br>ஒரு Compactor ன் விலைப்புள்ளி விகிதம் ரூ. 41,27,000.44/– (வரி மற்றும் இதர செலவினம் உட்பட) |
| 2 | கோயம்புத்தூர் மாநகராட்சி, மேற்கு மண்டலம் – 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட Compactor கொள்முதல் செய்தல் | ஒப்பந்தப்புள்ளி நாள்.11/05/2022<br><br>விலைப்புள்ளி நாள். 06/10/2022 | 41,36,000/– | தி/ள்.காம்–அவிடா என்விரோ இன்ஜினியரிஸ் பிரைவேட் லிமிடெட், புனே<br><br>ஒரு Compactor ன் விலைப்புள்ளி விகிதம் ரூ. 41,27,000.44/– (வரி மற்றும் இதர செலவினம் உட்பட) |
| 3 | கோயம்புத்தூர் மாநகராட்சி, வடக்கு மண்டலம் – 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட Compactor கொள்முதல் செய்தல் | ஒப்பந்தப்புள்ளி நாள்.11/05/2022<br><br>விலைப்புள்ளி நாள். 06/10/2022 | 41,36,000/– | தி/ள்.காம்–அவிடா என்விரோ இன்ஜினியரிஸ் பிரைவேட் லிமிடெட், புனே<br><br>ஒரு Compactor ன் விலைப்புள்ளி விகிதம் ரூ. 41,27,000.44/– (வரி மற்றும் இதர செலவினம் உட்பட) |
| 4 | கோயம்புத்தூர் மாநகராட்சி, தெற்கு மண்டலம் – 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட Compactor கொள்முதல் செய்தல் | ஒப்பந்தப்புள்ளி நாள்.11/05/2022<br><br>விலைப்புள்ளி நாள். 06/10/2022 | 41,36,000/– | தி/ள்.காம்–அவிடா என்விரோ இன்ஜினியரிஸ் பிரைவேட் லிமிடெட், புனே<br><br>ஒரு Compactor ன் விலைப்புள்ளி விகிதம் ரூ. 41,27,000.44/– (வரி மற்றும் இதர செலவினம் உட்பட) |

| வ. எண். | பணியின் பெயர் | ஒப்பந்தப் புள்ளி நாள் | மதிப்பீடு (ரூ) | ஒப்பந்ததாரரின் பெயர் கோரிய விலைப்புள்ளி |
|---|---|---|---|---|
| 5 | கோயம்புத்தூர் மாநகராட்சி, மத்திய மண்டலம் – 1 எண்ணிக்கையிலான 14 கனமீட்டர் கொண்ட Compactor கொள்முதல் செய்தல் | ஒப்பந்தப்புள்ளி நாள்.11/05/2022<br><br>விலைப்புள்ளி நாள். 06/10/2022 | 41,36,000/– | தி/ள்.காம்–அவிடா என்விரோ இன்ஜினியரிஸ் பிரைவேட் லிமிடெட், புனே<br><br>ஒரு Compactor ன் விலைப்புள்ளி விகிதம் ரூ. 41,27,000.44/– (வரி மற்றும் இதர செலவினம் உட்பட) |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள – 15 வது மத்திய நிதிக்குழு திட்டத்தின் கீழ் பணிக்கு குறைந்த விலைப்புள்ளி சமர்ப்பித்த தி/ள்.காம்–அவிடா என்விரோ இன்ஜினியரிஸ் பிரைவேட் லிமிடெட், புனே என்ற நிறுவனத்தாரின் விலைப்புள்ளி ஏற்கப்பட்டு வேலை உத்தரவு வழங்கப்பட்டுள்ளது என்பதனை மாமன்றத்தின் பார்வைக்கு தெரிவித்து கொள்ளப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அனுமதிக்கலாம் ந.க.எண். 369/2022/எம்.டி.5

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 292 நாள் 30.11.2022**

ஒத்திவைக்கப்பட்டது

---

## பொருள் எண் 9

**பொருள்** கோயம்புத்தூர் மாநகராட்சி – 15வது நிதிக்குழு கீழ் – தேசிய சுகாதார திட்டம் 2021–22 ன் படி நகர்ப்புற சுகாதார நல மையம் கட்டுதல் மற்றும் நகர பொது சுகாதார ஆய்வகம் கட்டுதல் – கூடுதல் மதிப்பீட்டு தொகை– பொது நிதி – ஒதுக்கீடு செய்வது – நிர்வாக அனுமதி – தொடர்பாக.

**பார்வை** 1 . நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.32454/2021/AMRUT-2 நாள். 17/12/2021.

2. தமிழ் நாடு பொது பணித்துறை செயல்முறை எண். HDO (A) /18064/2022–1 நாள்.19.07.2022

பார்வை 1–ல் காணும் கடிதத்தில், கோயம்புத்தூர் மாநகராட்சியில் 63 எண்ணிக்கையில் நகர்ப்புற சுகாதார மற்றும் நல மையம் கட்டுதல் மற்றும் 3 எண்ணிக்கையில் பொது சுகாதார ஆய்வகம் கட்டுதல் பணிகளுக்கு 15வது நிதிக்குழுவின் கீழ் ஒரு மையம் கட்டுதலுக்கு ரூ.25.00 இலட்சம் ஒதுக்கீடும் மற்றும் ஒரு ஆய்வகத்திற்கு ரூ.22 இலட்சம் ஒதுக்கீடும் செய்யப்பட்டு மையம் கட்டுதல் பணிக்கான நிர்வாக அனுமதி பெறப்பட்டது. அதனை தொடர்ந்து கோயம்புத்தூர் மாநகராட்சியில் முதலில் 57 இடங்களுக்கு சுகாதார நல மையம் ஒன்றிற்கு ரூ.25 இலட்சம் மற்றும் 3 இடங்களில் ஆய்வு கூடங்கள் ரூ.22 இலட்சம் மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு பணிகள் நடைப்பெற்று வருகிறது.

இடபற்றாகுறையின் காரணமாக இறுதி செய்யப்படாமல் இருந்த மீதமுள்ள 6 நகர்ப்புற சுகாதார நல மையத்திற்கு போதுமான இடம் தேர்வு செய்யப்பட்டு மதிப்பீடு தயார் செய்யப்படும் பொழுது பார்வை 2ன்படி பொதுபணித்துறையின்2022–23 நிதியாண்டிற்கான விலைப்பட்டியலின் உயர்வு மற்றும் 18/07/2022 முதல் அதற்கான சேவை மற்றும் சரக்கு கட்டணம் 12% சதவிதத்திலிருந்து 18% ஆக உயர்த்தப்பட்டதின் காரணமாக ரூ.28 இலட்சமாக மதிப்பீடு உயர்ந்துள்ளது.

| வ.எண் | ந.க.எண் | பணியின் பெயர் | மதிப்பீடு (ரூ) |
|---|---|---|---|
| 1. | 4959/2022/எம்டி2 | மேற்கு மண்டலம் – வார்டு எண்.34 க்குட்பட்ட சௌடாம்பிகா நகர் பகுதியில் நகர்ப்புர சுகாதார நல மையம் கட்டுதல் | 28,00,000/– |
| 2. | 4958 /2022/எம்டி2 | மேற்கு மண்டலம் – வார்டு எண். 75 க்குட்பட்ட லட்சுமி நகர் (ஹவுசிங்யூனிட் அருகில்) பகுதியில் நகர்ப்புர சுகாதார நல மையம் கட்டுதல் | 28,00,000/– |
| 3. | 4956 /2022/எம்டி2 | மேற்கு மண்டலம் – வார்டு எண். 42 க்குட்பட்ட சாஸ்திரி வீதியில் நகர்ப்புர சுகாதார நல மையம் கட்டுதல் | 28,00,000/– |
| 4. | 4957 /2022/எம்டி2 | மேற்கு மண்டலம் – வார்டு எண். 38 க்குட்பட்ட பொன்நகர், ஓனாப்பாளையம், (கல்வீரம்பாளையம்) பகுதியில் நகர்ப்புர சுகாதார நல மையம் கட்டுதல் | 28,00,000/– |
| 5. | 4960 /2022/எம்டி3 | கிழக்கு மண்டலம் – வார்டு எண். 23 க்குட்பட்ட மதுசூதனன் நகர் பகுதியில் நகர்ப்புர சுகாதார நல மையம் கட்டுதல் | 28,00,000/– |
| 6. | 49666/2022/எம்டி3 | வடக்கு மண்டலம் – வார்டு எண். 13 க்குட்பட்ட சின்னவேடம்பட்டி பகுதியில் நகர்ப்புர சுகாதார நல மையம் கட்டுதல் | 28,00,000/– |

எனவே, மேற்காணும் பட்டியலில் இணைக்கப்பட்டுள்ள 6 மையங்களுக்கு பார்வை 1ன் படி ஒரு மையம் கட்டுவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட தொகையான ரூ.25 இலட்சம் போதுமானதாக இருக்காது. எனவே, ஒரு மையம் கட்டுவதற்கு ஏற்கனவே நிர்வாக அனுமதி பெறப்பட்ட ரூ.25.00 இலட்சம் மதிப்பீடு தொகையினை 15வது மத்திய நிதிக்குழு நிதியிலும் மற்றும் மீதமுள்ள ரூ.3 இலட்சத்தினை மாநகராட்சியின் பொது நிதியின் மூலம் ஒதுக்கீடு செய்வதற்கு மேற்கண்ட பணியின் அவசர அவசியம் கருதி நிர்வாக அனுமதிக்கு முன் அனுமதி 09.09.2022 அன்று பெறப்பட்டதற்கு பின்னேற்பு வேண்டி மன்றத்திற்கு பொருள் சமர்ப்பிக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு : அனுமதிக்கலாம். ந.க.எண்.4959/2022/எம்டி2

<u>மாநகர மன்றத் தீர்மானம் எண் 293 நாள் 30.11.2022</u>

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 10**

கோயம்புத்தூர் மாநகராட்சி – ஐந்து மண்டலத்திற்குட்பட்ட வார்டு பகுதிகளில் தமிழ்நாடு நகர்ப்பற உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டம் (TURIP) – (2022-2023) பகுதி -1 -ன் கீழ் சேதமடைந்த சாலைகளை சீரமைக்க ரூ.2600.03 இலட்சம் மதிப்பீட்டில் மேற்கொள்ள நகராட்சி நிர்வாக இயக்குநர் அவர்களின் செயல்முறை ஆணை ந.க.எண்.24826/2022/SS2 நாள்.07.09.2022-ல் நிர்வாக அனுமதி பெறப்பட்டு, ஒப்பந்தப்புள்ளி தேதி.29/09/2022 அன்று கோரப்பட்டு, தொழில்நுட்ப திறனாய்வு செய்யப்பட்டு தொழில்நுட்ப தகுதி பெற்ற நிறுவனத்தின் விலைப்புள்ளி திறக்க ஆணையாளர் அவர்களின் அனுமதி நாள். 30/09/2022 பெறப்பட்டதன் அடிப்படையில் விலைப்புள்ளி 06/10/2022 அன்று திறக்கப்பட்டு கீழ்கண்டவாறு குறைந்த விலைப்புள்ளி பெறப்பட்ட ஒப்பந்ததாரர்களிடமிருந்து மீண்டும் விலைக்குறைப்புக்கான கடிதம் இரு முறை வழங்கப்பட்டது. அதன் அடிப்படையில் ஒப்பந்ததாரர்களிடமிருந்து குறைந்த விலைப்புள்ளிகள் பெறப்பட்ட விபரங்கள்.

| வ. எண் | மண்டலம் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|
| 1 | கிழக்கு | கிழக்கு மண்டலம் வார்டு எண்.24 -க்குட்பட்ட தண்ணீர் பந்தல் சாலை (ரயில் லைன் முதல் எஸ் பெண்ட் வரை) மற்றும் எஸ் பெண்ட் முதல் கொடிசியா சாலை வரை தார்தளம் புதுப்பித்தல். ந.க.எண். 4721 /2022/எம்.டி.3 சிப்பம் -1 | 184.96 | தி/ள்.பி.எஸ்.கே அசோசியேட் (3.00 % அதிகம்) |

| வ. எண் | மண்டலம் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|
| 2 | கிழக்கு | கிழக்கு மண்டலம் வார்டு எண்.7-க்குட்பட்ட பெரியார் நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை, வார்டு எண்.8-க்குட்பட்ட எல்.என். நகர் பிரதான சாலை மற்றும் குறுக்கு சாலை, வார்டு எண்.9-க்குட்பட்ட அசோக் ஜி நகர் மற்றும் வார்டு எண்.50-க்குட்பட்ட நேதாஜி பிரதான சாலை மற்றும் நேதாஜி வீதி -6 ஆகிய பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல்.<br>ந.க.எண். 4721 /2022/எம்.டி.3 சிப்பம் -2 | 134.97 | **தி**/ள். சரஸ்வதி அன் கோ<br>(3.00 % அதிகம்) |
| 3 | கிழக்கு | கிழக்கு மண்டலம் வார்டு எண்.55-க்குட்பட்ட எஸ்.ஐ.எச்.எஸ் காலனி மற்றும் வார்டு எண்.58-க்குட்பட்ட விவேகானந்தா நகர் 1வது மற்றும் 2வது வீதி ஆகிய பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல்.<br>ந.க.எண். 4721 /2022/எம்.டி.3 சிப்பம் -3 | 167.96 | தி/ள்.பி.எஸ்.கே. அசோசியேட்<br>(3.00 % அதிகம்) |
| 4 | மேற்கு | மேற்கு மண்டலம் வார்டு எண்.42-க்குட்பட்ட திலகர் வீதி,வ.உ.சி வீதி -1, வார்டு எண்.43-க்குட்பட்ட டாக்டர் ராதாகிருஷ்ணன் சாலை, குப்புசாமி வீதி, சுப்பய்யா வீதி, ஆனந்தா ஹவுசிங் யூனிட் மற்றும் வார்டு எண்.72-க்குட்பட்ட சுப்ரமணியம் சாலை ஆகிய பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல்.<br>ந.க.எண். 4721 /2022/எம்.டி.3 சிப்பம் -4 | 147.04 | தி/ள்.அபி அசோசியேட்ஸ்<br>(3.00 % அதிகம்) |
| 5 | மேற்கு | மேற்கு மண்டலம் வார்டு எண்.43-க்குட்பட்ட வேலப்பன் வீதி, வார்டு எண்.44-க்குட்பட்ட மருதகுட்டி வீதி, வார்டு எண்.45-க்குட்பட்ட காமராஜா வீதி, வார்டு எண்.71-க்குட்பட்ட மேற்கு சம்பந்தம் சாலை, பாதர் ரேண்டி வீதி (என்.எஸ்) மற்றும் வார்டு எண்.73-க்குட்பட்ட லவ்லி சாலை II, சக்தி மாரியம்மன் கோவில் வீதி, திருமூர்த்தி லே அவுட் ஆகிய பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல்.<br>ந.க.எண். 4721 /2022/எம்.டி.3 சிப்பம் -5 | 159.90 | தி/ள்.எம்.எஸ். இன்ஜினீயர்ஸ்<br>(3.00 % அதிகம்) |
| 6 | மேற்கு | மேற்கு மண்டலம் வார்டு எண்.73-க்குட்பட்ட பிருந்தா லே அவுட் குறுக்கு சாலை 1, பிருந்தா லே-அவுட் குறுக்கு சாலை -2, பிருந்தா லே-அவுட் குறுக்கு சாலை -3, பிருந்தா லே-அவுட் குறுக்கு சாலை -4, பிருந்தா லே-அவுட் குறுக்கு சாலை -5, பிருந்தா லே-அவுட் குறுக்கு சாலை -6, ராமகிருஷ்ணாபுரம் சாலை -1, ராமகிருஷ்ணாபுரம் சாலை -2 , வார்டு எண்.43-க்குட்பட்ட விநாயகர் கோவில் வீதி, வார்டு எண்.44-க்குட்பட்ட மணியம் மருதகுட்டி வீதி மற்றும் வார்டு எண்.45-க்குட்பட்ட மணியம் வேலப்பர் வீதி ஆகிய பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல்.<br>ந.க.எண். 4721 /2022/எம்.டி.3 சிப்பம் -6 | 133.15 | தி/ள்.சரஸ்வதி அன் கோ<br>(3.00 % அதிகம்) |
| 7 | வடக்கு | வடக்கு மண்டலம் வார்டு எண்.18-க்குட்பட்ட சங்கனூர்- நல்லம்பாளையம் சாலை மற்றும் வார்டு எண்.28-க்குட்பட்ட மாகாத்மா காந்தி சாலை (எம்.ஜி சாலை) ஆகிய பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல்.<br>ந.க.எண். 4721 /2022/எம்.டி.3 சிப்பம் -7 | 152.96 | தி/ள்.சரஸ்வதி அன் கோ<br>(3.00 % அதிகம்) |

| வ. எண் | மண்டலம் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|
| 8 | வடக்கு | வடக்கு மண்டலம் வார்டு எண்.30-க்குட்பட்ட ரவீந்தரநாத் தாகூர் சாலை மற்றும் வார்டு எண்.19-க்குட்பட்ட அத்திபாளையம் சாலை ஆகிய பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல்.<br>ந.க.எண். 4721 /2022/எம்.டி.3 சிப்பம் -8 | 157.96 | தி/ள்.பி.எஸ்.கே அசோசியேட் (3.00 % அதிகம்) |
| 9 | வடக்கு | வடக்கு மண்டலம் வார்டு எண்.27-க்குட்பட்ட ஆவராம்பாளையம் பிரதான சாலை -1, பாரதி காலனி பிரதான சாலை மற்றும் வார்டு எண்.28-க்குட்பட்ட எஸ்.என்ஆர் ஆர்ட்ஸ் காலேஜ் சாலை, நவ இந்தியா சாலை ஆகிய பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல்.<br>ந.க.எண். 4721 /2022/எம்.டி.3 சிப்பம் -9 | 176.92 | தி/ள்.பி.எஸ்.கே அசோசியேட் (3.00 % அதிகம்) |
| 10 | தெற்கு | தெற்கு மண்டலம் வார்டு எண்.89, 90, 91, 94, 93, 92, 85, 96 மற்றும் 98-க்குட்பட்ட 1. பள்ளி வீதி, ராமசெட்டிபாளையம், 2. சி.பி.எம் காலேஜ் சாலை 3. சத்யா நகர் பிரதான சாலை 4. பதிவாளர் காலனி 5. அண்ணா நகர் பிரதான சாலை (மேற்கு முதல் கிழக்கு) 6. சக்தி விநாயகர் கோவில் பிரதான சாலை, 7. சக்தி விநாயகர் கோவில் வீதி, 8. காந்திஜி சாலை 9. காந்திஜி குறுக்கு சாலை -1, 10. காந்திஜி சாலை, 11. ராஜாமுத்தையா நகர் 1-வது வீதி ஆகிய பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல்.<br>ந.க.எண். 4721 /2022/எம்.டி.3 சிப்பம் -10 | 159.17 | தி/ள்.ஸ்ரீ கோமதியம்மன் அன் கோ (3.00 % அதிகம்) |
| 11 | தெற்கு | தெற்கு மண்டலம் வார்டு எண்.87-க்குட்பட்ட வடக்கு ஹவுசிங் யூனிட் வடக்கு தெற்கு சாலை, வசந்தம் நகர் வடக்கு முதல் தெற்கு சாலை -1, வசந்தம் நகர் வடக்கு முதல் தெற்கு சாலை -2 மற்றும் வார்டு எண்.88-க்குட்பட்ட எம்.எஸ் கார்டன் பிரதான சாலை -1, எம்.எஸ் கார்டன் பிரதான சாலை -2,எம்.எஸ் கார்டன் மேற்கு முதல் கிழக்கு சாலை -5 ஆகிய பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல்.<br>ந.க.எண். 4721 /2022/எம்.டி.3 சிப்பம் -11 | 122.32 | தி/ள்.அபி அசோசியேட் (3.00 % அதிகம்) |
| 12 | தெற்கு | தெற்கு மண்டலம் வார்டு எண்.76-க்குட்பட்ட அம்மன் நகர் பிரதான சாலை, அம்மன் நகர் குறுக்கு சாலை -3 , வள்ளல் நகர், வார்டு எண்.77-க்குட்பட்ட ராமமூர்த்தி பிரதான சாலை முதல் சொக்கம்புதூர் சந்திப்பு முதல் 60 அடி சாலை சாலை மற்றும் வார்டு எண்.79-க்குட்பட்ட சுண்டக்காமுத்தூர் சாலை ஆகிய பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல்.<br>ந.க.எண். 4721 /2022/எம்.டி.3 சிப்பம் -12 | 161.40 | தி/ள்.எம்.எஸ். இன்ஜினீயர்ஸ் (3.00 % அதிகம்) |
| 13 | மத்தியம் | மத்திய மண்டலம் வார்டு எண்.31, 32, 47, 67, 68, 69-க்குட்பட்ட நியு முல்லை நகர் விரிவாக்கம் (வேலம்மாள் வீதி 3, 4 ), சங்கனூர் சாலை குறுக்கு 3, சங்கனூர் குறுக்கு சாலை -1. சாமி வீதி, சாஸ்திரி சாலை, விஜ்வநாதபுரம் பிரதான சாலை, காளப்பன் லே அவுட், டேங்க் சாலை, காமராஜபுரம் 3- வது வீதி ஆகிய பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல்.<br>ந.க.எண். 4721 /2022/எம்.டி.3 சிப்பம் -13 | 141.03 | திரு.கே.நடராஜன் (3.00 % அதிகம்) |

| வ. எண் | மண்டலம் | பணியின் பெயர் | மதிப்பீட்டுத் தொகை ரூ லட்சத்தில் | தேர்வு செய்யப்பட்ட ஒப்பந்ததாரர் |
|---|---|---|---|---|
| 14 | மத்தியம் | மத்திய மண்டலம் வார்டு எண்.62-க்குட்பட்ட எஸ்என்வி கார்டன், 80 அடி சாலை, வார்டு எண்.64-க்குட்பட்ட பெரியார் நகர், ஜெகநாதன் நகர், சபுபையன் சாலை, வார்டு எண்.65-க்குட்பட்ட ஆறுமுகம் நகர் சாலை-2, ஆறுமுகம் நகர் சாலை -4, வார்டு எண்.80-க்குட்பட்ட குறின்சி கார்டன் 1-வது வீதி, குறின்சி கார்டன் 2- வது வீதி, வார்டு எண்.83-க்குட்பட்ட தேவி அன்ட் கோ சந்து (கீதா ஹால் சாலை), பாத்திமா நகர் -3 மற்றும் வார்டு எண்.84-க்குட்பட்ட ஆப்பிள் கார்டன், பாத்திமா நகர் -5 ஆகிய பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல்.<br><br>ந.க.எண். 4721 /2022/எம்.டி.3 சிப்பம் -14 | 166.59 | தி/ள்.அபி அசோசியேட்ஸ் (3.00 % அதிகம்) |
| 15 | மத்தியம் | மத்திய மண்டலம் வார்டு எண். 31, 32, 46, 69, 66, 70 மற்றும் 82-க்குட்பட்ட ஐஸ்வர்யா கார்டன் பிரதான சாலை, ராஜுவ் காந்தி நகர் விரிவாக்கம், அருள் நகர் கார்டன் பிரதான சாலை, சாஸ்திரி சாலை, ராஜா அண்ணாமலை சாலை, எல்.எம்.எல் காலனி, யு.எம்.எல் காலனி 1 –வது வீதி அம்மன்குளம் வடக்கு, தேவாங்கபேட் சாலை, தியாகராய புது வீதி -1, இஸ்மாயில் வீதி, எஸ்.பி.என் லே-அவுட், மணிய தோட்டம் -2 ஆகிய பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல்.<br>ந.க.எண். 4721 /2022/எம்.டி.3 சிப்பம் -15 | 120.57 | தி/ள்.ஸ்ரீ பானு கன்ஸ்ட்ரக்சன்ஸ் (3.00 % அதிகம்) |
| 16 | வடக்கு, தெற்கு, மேற்கு | வடக்கு மண்டலம் வார்டு எண்.3 மற்றும் தெற்கு மண்டலம் வார்டு எண்.97,100-க்குட்பட்ட சக்தி நகர் சாலை -7, சக்தி நகர் சாலை -8, சக்தி நகர் சாலை -11, சக்தி நகர் சாலை -13, சக்தி நகர் சாலை -14, சக்தி நகர் சாலை -15, வஞ்சியம்மன் நகர் சாலை -11, எம்.ஜி.ஆர் பிரதான சாலை, கணேஷபுரம் பிரதான சாலை, ஆடிட்டர் வீதி, வொயட் வீதி, ஸ்ரீநிவாசராகவன் சாலை ஆகிய பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல்.<br><br>ந.க.எண். 4721 /2022/எம்.டி.3 சிப்பம் -16 | 157.02 | தி/ள்.வெற்றி கன்ஸ்ட்ரக்சன்ஸ் (3.00 % அதிகம்) |
| 17 | கிழக்கு, மத்தியம், மேற்கு | கிழக்கு மண்டலம் வார்டு எண்.22,57,58 மற்றும் மத்திய மண்டலம் வார்டு எண்.66-க்குட்பட்ட கிருஷ்ணசாமி லேஅவுட், பொன்னுசாமி லே-அவுட், கௌரி ஆண்டவர் லேஅவுட், மீனாட்சி நகர், டீ எஸ்டேட் வடதெற்கு சாலை -1 , டீ எஸ்டேட் கிழமேற்கு சாலை -2. டீ எஸ்டேட் கிழமேற்கு சாலை -3, ஏடிடி வடதெற்கு சாலை, கமரன் நகர், பட்டணம் ஈட்டேரி சாலை, விவேகானந்தா நகர் வீதி -3, விவேகானந்தா நகர் வீதி -4, விவேகானந்தா நகர் வீதி -5 ஆகிய பகுதிகளில் தார்தளம் புதுப்பித்தல்.<br>ந.க.எண். 4721 /2022/எம்.டி.3 சிப்பம் -17 | 156.11 | தி/ள்.வெற்றி கன்ஸ்ட்ரக்சன்ஸ் (3.00 % அதிகம்) |
| | | | 2600.03 | |

மேற்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ள தமிழ்நாடு நகர்ப்பற உட்கட்டமைப்பு வளர்ச்சி திட்டம் (TURIP) (2022–2023) பகுதி –1 பணிகளுக்கு அவசரம் அவசியம் கருதி ஆணையாளர் அவர்களின் உத்தரவின் படி, குறைந்த விலைப்புள்ளி சமர்ப்பித்த ஒப்பந்ததாரர்களுக்கு பணி உத்தரவு 07/10/2022 அன்று வழங்கப்பட்டுள்ளது என்பதனை மாமன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு : அனுமதிக்கலாம் ந.க.எண்.4721/2022/எம்.டி.3

**மாநகர மன்றத் தீர்மானம் எண் 294 நாள் 30.11.2022**

அனுமதிக்கப்பட்டது.

---

**பொருள் எண் 11**

பொருள்: Implementation of Solar Development Project in Coimbatore Corporation.

பார்வை: 1) G.O.(Ms.)No.43, MA& WS (MA2) department dated 28.02.2019.

2) ADB assisted TNUFIP –T1/Gant Sanction Letter: TNUDF/Project/ Coimbatore Solar, dated.17.02.2021

---

கோயம்புத்தூர் மாநகராட்சியில் வெள்ளலூர் பகுதியில் உள்ள பழைய குப்பைக் கிடங்கு வளாகத்தில் கட்டப்பட்டு வரும் கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையத்திற்கு பயன்படும் வகையில் 2 மெகாவாட் திறனுள்ள சூரிய மின்உற்பத்தி நிலையம் வடிவமைப்பு, பொறியியல், உற்பத்தி, வழங்கல் நிறுவுதல், சோதனை மற்றும் செயல்படுத்துதல் (Design, Engineering, Manufacture, Supply, Erection, Testing and Commissioning) பணிக்கு ரூ.14.15 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ள அரசாணை நிலை எண் 43, நநி&குவ நாள் 28.02.2019 அன்று நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது.

